**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**Probate O.P.No.297/2019**

PW - 2

2025 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 28 ஆம் நாள் திங்கட்கிழமை அன்று திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | ரவீந்திரன் |
| கணவர் / தந்தை பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் மனுதாரர் சார்பாக ம.சா.2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை Ex.X.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வெள்ளளூர், கோயமுத்தூரில் குடியிருக்கிறேன். கடந்த 2004 ல் பாப்பாண்ணன் எழுதிய உயில் சம்மந்ததமாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பாப்பண்ணன் எனது பெரியப்பா ஆகும். 2004 ல் எனது பெரியப்பா ரத்தினசாமி என்ற ஒரு வழக்கறிஞரை பார்க்கவேண்டுமென்று என்னை கோயமுத்தூர் டி.எஸ்.பி அலுவலகத்திற்கு அருகே அழைத்துச் சென்றார். எனது பெரியப்பா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை கையில் கொண்டு வந்திருந்தார். அதை வழக்கறிஞரிடம் கொடுத்து உயிலை தயார் செய்தார். அதற்கு முகுந்தன் மற்றும் முனியன் என்ற இருவரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். சாட்சிகள் இருவரும் வழக்கறிஞர் அலுவலகத்தில்தான் இருந்தார்கள். முதலில் உயிலில் எனது பெரியப்பா கையொப்பம் செய்தார். அவரை தொடர்ந்து சாட்சிகள் முகுந்தனும், முனியனும் கையொப்பம் செய்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 உயிலில் காணப்படுவது

எனது பெரியப்பா பாப்பண்ணனின் கையொப்பம்தான். உயிலில் இரண்டு சாட்சிகளும் எனது முன்னிலையில்தான் கையொப்பம் செய்தார்கள்.

**(3, 7 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒம்/ரவீந்திரன்,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.